# நான் யார்?

## லில்லியன் ஸ்டான்லி

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் எதற்கு இந்த உலகில் இருக்கிறேன்? நான் எங்கு போகிறேன்? இருபது வயதில் எங்களை அலட்டாத இந்தக் கேள்விகள், இன்றைய வாலிபரின் மூளைகளைப் புழுக்களாய்த் தின்கின்றன. இந்தச் சித்ரவதையைத் தாங்கக்கூடாமல் சிலர் தற்கொலையை சிந்திக்கின்றனர், தங்களைக் காயப்படுத்திக் கொள்கின்றனர், மனச்சோர்புக்கு ஆளாகின்றனர் அல்லது உடலுறவு, குடி, போதை மருந்துகளில் அடைக்கலம் தேடுகின்றனர். மன அழுத்தத்தை மறக்க T.V. அல்லது கைப்பேசியில் மூழ்குகின்றனர். இதனால் படிப்பில் கவனம் செலுத்த முடிவதில்லை. உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்ல முயற்சிக்கிறேன்.

முதல் கேள்வி: நான் யார்? நீங்கள் எதேச்சையாகத் தோன்றினவர்களல்ல. இறைவன் உங்களைத் திட்டமிட்டுப் படைத்தார். உங்கள் தாயின் கர்ப்பத்தில் நீங்கள் உருவாகுமுன்னே, கடவுள், உங்கள் உடலின் நுண்ணணுவாகிய ந்யூக்ளியசின் பாகங்களாகிய DNA மற்றும் ஜீன்களைப் பார்த்தார் (சங் 139). உங்கள் கேள்விகளுக்கான பதிலை, அண்டசராசரங்களில், ஒரு இடம் தவிர வேறு எங்கும் கண்டுபிடிக்க முடியாது, அதுதான் திருமறை – கடவுளது சொந்த புத்தகம். ஆகவே அங்கிருந்து உங்கள் கேள்விகளுக்கு பதில்காண முயலுவோம். உங்கள் பெற்றோர் உங்களை பார்க்கும் முன்பாகவே நீங்கள் இறைவனது பார்வையில் இருந்தீர்கள் – சிசுவாக அல்ல, DNAவாகவும் நுண்ணணுவாகவும்! கடவுளே உங்களைப் படைத்தார் என்பதற்கு திருமறையே ஆதாரம். நீங்கள் நீங்களாகுமுன்பாகவே கர்த்தர் உங்கள் நுண்ணணுவைப் பார்த்தார் என்கிறது சங்கீதம் 139 (வச 16).

உலகத் தோற்றமுதல் அதன் முடிவுவரை உங்களைப் போல் வேறொருவர் இருந்திருக்கக்கூடாது, இனி பிறக்கவும் கூடாது என்ற அக்கறையோடு பராபரன் உங்கள் எலும்புகளையும் தசைகளையும் இணைத்து, உங்கள் கைரேகைகளையும் கருவிழிகளையும் வரைந்து, உங்கள் முகம் மற்றும் மூளையை வடிவமைத்தார். எந்த விஞ்ஞானி அல்லது ஞானி இதைச் செய்ய முடியும்? எனவே நீங்கள் ஒரு அற்புதம், நீங்கள் யோசிப்பது என்ன, பேசப்போவது என்ன என்று அவர் அறிவார் (சங் 139:3,4). அவர் எங்கும் இருப்பதால் அவரை விட்டு நீங்கள் எங்கும் ஓடிவிட முடியாது (வச 7-12). உங்கள் உள் அவயவங்களை உருவாக்கினார். தலைச்சிறந்த புகைப்படக் கருவியைவிட உங்கள் கண்களைச் சிறப்பாகப் படைத்தார். உங்கள் எண்ணமாகவே இருக்கிறார் (வச 17,18). உங்களைக் குறித்த அவரது எண்ணங்களெல்லாம் நன்மைக்கானவைகளே. உங்களுக்கு நல்ல எதிர்காலத்தையும், நம்பிக்கையையுமே வைத்திருக்கிறார் (எரே 29:11) குதித்தெழுங்கள்!

படைத்த இறைவனோடு மனிதன் சண்டை போடலாமா? குயவனை நோக்கி களிமண், ‘‘ஏன் என்னை இப்படி வனைந்தாய்?’’ என்று கேள்வி கேட்கலாமோ? இன்றைய இளைஞரோ அப்பாவிடம், ‘‘என்னை ஏன் இவ்வுலகுக்கு கொண்டு வந்தாய்?’’ என்று அதட்டுகிறார்கள். தாயிடம், ‘‘என்னை ஏன் பெத்தாய்?’’ என்று கோபிக்கிறார்கள். இதனால் உங்களைப் படைத்தவரை இழிவுபடுத்துகிறீர்கள் (ஏசா 45:9,10). ஆனால் இறைவன் உங்கள் மனஉளைச்சலைப் புரிந்துகொள்பவர். வானத்தையும், சூரிய சந்திரனையும், விண்மீன்களையும் பாருங்கள். மஞ்சள் மாலை உங்களைக் குளிப்பாட்டி தென்றல் உங்கள் கூந்தலை அலசட்டும். எந்தப் பொறியாளர் இவற்றைச் செய்வார்? நீங்கள் உயிர்வாழும்படி காற்றில் பிராணவாயுவைக் கலந்தவர் யார்? வைட்டமின் Dஐ உங்கள் எலும்புகளுக்காக சூரிய ஒளியிலும், உங்கள் வயல்வெளிக்காக மழையில் நைட்ரஜனையும் வைத்தவர் யார்? உங்கள் வாழ்வின் எல்லா நுணுக்கங்களுக்காகவும் கவலைப்படுகிறவர் கர்த்தர் (சங் 8:3,4).

படைப்பிலேயே நீங்கள் பரமனின் மகிமையைக் காணலாம். ஓடும் ஓடையில் துள்ளும் மீன்களிலும், கடலின் அலைகளிலும் கடல்வாழ் உயிரினங்களிலும், ஆகாயத்துப் பறவைகளிலும், வனத்தின் விலங்குகளிலும்! இவற்றையெல்லாம் ரசித்த பின்பு இறைவன் இல்லை என்றா சொல்லமுடியும்? அவரைப் போற்றுங்கள். கடவுளைத் தேடித் திரிய வேண்டாம், கடவுளை

உண்டாக்கவும் வேண்டாம். அப்படிச் செய்தால் அவர் உங்களை உங்கள் வழிக்கே விட்டுவிடுவார்; அதன் முடிவு பாவமும் அழிவும் பாதாளமுமே! (ரோ 1:20-32). ஆனால் தலைவணங்கி அவரை இறைவன் என்றும், ஆண்டவர் என்றும் ஏற்றுக்கொண்டால், அவர் உங்க ளுக்குத் தன்னை வெளிப்படுத்தி உங்கள் தகப்பனாவார்.

கடவுள் அன்பானவர் (யோவா 4:8). உங்களைப் பரிவோடு நடத்துவார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப் படும்படியாக தனது ஒரே மகன் இயேசு கிறிஸ்துவை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து மூன்றாம் நாள் உயிர்பெறச் செய்தார். இதை நம்பி அவரை உங்களைக் காப்பாற்றுபவராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டால் உங்கள் வாழ்க்கை மாறும். உங்கள் சந்தேகங்களும் சோர்பும் பறந்துபோம், வாழ்க்கை அர்த்தமுள்ளதாவதோடு அதன் நோக்கையும் கண்டு கொள்வீர்கள். எந்த அதிர்ச்சியிலும் உங்களைத் தாங்கிப் பிடிக்க அவர் இருப்பார். இவற்றின் அடிப்படை விசுவாசமே. கடவுள் இருக்கிறார் என்பதையும் உண்மை யாய் அவரைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிப்பார் என்பதையும் நம்பினால் போதும். அவரை நம்புவதினால் அவருக்குப் பிரியமானவர்களாகிறீர்கள் (எபி 11:6). அவரைப் பார்க்காவிட்டாலும் அவர் சத்தம் கேட்கா விட்டாலும் அவரை நம்பிப் பற்றிக்கொள்வதே விசுவாசம். இப்போதைய உங்கள் வெறுமையும் சோர்புமான வாழ்வல்ல, பரிசுத்தமும் பரவசமுமான வாழ்வை அருளுவார்.

துவங்கின இடத்திற்கு வருவோமா? நான் யார்? நீங்கள் உங்கள் பெற்றோர்களால் பிறந்தவர்களல்ல, பரமனின் படைப்பு. எங்கிருந்து வந்தீர்கள்? இறைவன் உங்களை வடிவமைத்து உங்கள் பெற்றோர் மூலம் இவ்வுலகத் திற்குள் உங்களைக் கொண்டுவந்தார். ஏன் நான் இவ்வுலகில் இருக்கிறேன்? நீங்கள் செய்யவேண்டு மென்று கர்த்தர் விரும்புவதைச் செய்து அவரது அபாரப் பரிசைப் பெறும்படியாக இவ்வுலகில் இருக்கிறீர்கள். நான் எங்கு செல்கிறேன்? நீங்கள் போகக்கூடிய இடங்கள் இரண்டு உண்டு. ஆத்தில் ஒரு காலும் சேத்தில் ஒரு காலுமாக நடக்க முடியாது. உலகை விரும்பி பெரிய வாயிலில் நுழைந்து அகலமான பாதையில் நடந்து நரகத்திற்குப் போகலாம். அல்லது கடவுளைப் பற்றிக்கொண்டு உலகை உதறிவிட்டு, சின்ன வாயிலில் நுழைந்து நெருக்கமான வழியாகச் சென்று விண்ணரசை எட்டி நித்திய மகிழ்ச்சியை அனுபவிக்கலாம் (மத் 7:13,14). இறைவனைத் தெரிந்துகொண்டால் இன்றே திருமறையை வாசிக்கத் துவங்குங்கள். தன்னை அடைய ஆண்டவரே உங்களுக்கு வழிகாட்டி எழுதின கடிதமது. இன்றே தெரிந்தெடுங்கள்!